23/24.7.2012

மணிச்சுடர்



## திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி தாளாளர்

# ஏ.கே.காஜா நஜிமுதீன் சாஹிபிற்கு அமெரிக்க பல்கலை. முனைவர் பட்டம்

திருச்சி, ஜூலை 23–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி 1951 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு 61 ஆண்டுகள் உயர்கல்விச் சேவையை வழங்கி வருகிறது. தன்னாட்சி மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் அங்கிகாரம் பெற்ற இக்கல்லூரி, சென்ற ஆண்டு "ஆற்றல் வளத் தனித்தகுதி" (COLLEGE WITH POTENTIAL FOR EXCELLENCE) சான்றிதழ் பெற்று வரலாற்றுச் சாதனைப் படைத்திருக்கிறது. பல்வேறுபட்ட இளங்கலை, முதுகலை மற்றும் உயர்கல்வி ஆராய்ச்சி பட்டப்படிப்புகளை வழங்கி வரும் இக்கல்லூரியில், சுமார் 11,000 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர்.

ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகக்குழு செயலரும் தாளாளருமாகிய ஏ. கே. காஜா நஜீமுதீன் சாஹிப் அவர்களின் அயராத 25 ஆண்டு கால உயர்கல்விச் சேவையையும் சாதனைகளையும் பாராட்டி, சென்ற புதன்கிழமை 18–07–2012 அன்று கொடைக்கானலில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அமெரிக்காவின் உலகத் தமிழ் பல்கலைக்கழகம் "முனைவர் பட்டம்" வழங்கிச் சிறப்பித்தது. அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் நிறுவனரும் தலைவருமான முனைவர் செல்வின் குமார் முனைவர் பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

முனைவர் பட்டம் பெற்ற திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி தாளாளர் ஏ. கே. காஜா நஜீமுதீன் சாஹிப் அவர்களுக்கு துபை ஈமான் அமைப்பின் பொதுச்செயலாளர் குத்தாலம் அல்ஹாஜ் ஏ. லியாக்கத் அலி உள்ளிட்ட நிர்வாகிகள், ஐக்கிய அரபு அமீரக ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தினர் உள்ளிட்டோர் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

முனைவர் பட்டம் பெற்ற திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி தாளாளருக்கு ஈமான் டைம்ஸ் வாழ்த்து !